செ.வெ.எண்:12 நாள்:09.03.2018

# பத்திரிக்கை செய்தி

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை உற்சாகப்படுத்தி தொழில் முனைவோராக உருவாக்கும் நோக்கத்துடன் கரூர் மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையம், சிறப்பான பணியினைச் செய்து வருகிறது.

இதன் தொடர் நிகழ்வாக மாவட்ட தொழில் மையமும் சென்னை தொழில் முனைவோர் வளர்ச்சி மற்றும் புத்தாக்க பயிற்சி மையமும் சேர்ந்து நடத்தும் "தொழில் முனைவோர் வாரம்" 20.03.2018 அன்று கரூர் அரசு கலைக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் மாவட்ட ஆட்சியர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சங்க பிரதிநிதிகள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கரூர் மாவட்ட தொழில் முனைவோர் பயிற்சி நிலைய இயக்குநர் மற்றும் அரசுக்கலைகல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு தொழில் கருத்தரங்கினை சிறப்புரை வழங்க உள்ளனர். "தொழில் முனைவோர்கள்" என்ற தலைப்பில் கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரைகள் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

கரூர் மாவட்டத்தில் உள்ள படித்த வேலைவாய்ப்பிற்காக காத்திருப்போர் மற்றும் "தொழில் முனைவோர்" ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயனடைய வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

கரூர்.